மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.—மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு, இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

3. அமைச்சர் அறிக்கை

தஞ்சாவூர் மாவட்டத்தில், இந்திய உணவுக் கழகம் நெல் கொள் முதல் செய்யும் முறை பற்றியும், விநியோகிக்கும் முறைபற்றியும் உணவு-வருவாய்த் துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.—அடுத்து பேரவையின் 82-வது விதியின் கீழ் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்.—தலைவர் அவர்களே, இந்திய உணவுக் கழகம், தஞ்சாவூர் மாவட்டத்தில் தங்களுக்குள்ள அரைவை ஆலைகள், உலர வைக்கும் ஆலைகள் ஆகியவற்றின் உதவியுடன் குறுவைப் பருவத்தில் சுமார் 40,000 டன் நெல் கொள்முதல் செய்ய இயலும் என்று தெரிவித்துள்ளது. இது கிட்டத்தட்ட 25,000 டன் அரிசிக்கு சமமான அளவாகும். உற்பத்தியாளர்களுக்கு நியாயமான குறைந்த விலை கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் தேவையான அளவுக்கு உணவுப் பொருள் வழங்கு கழகம் கூடுதலாகக் கொள்முதல் செய்யும்.

போதுமான இருப்பு நிலையைக் கருத்திற் கொண்டும் (அரசு இருப்பில் 1,00,000 டன்னுக்கு மேலும், இந்திய உணவுக் கழகத்திடம் 25,000 டன் அளவுக்கும்) பயிர் செய்யப்படாத காலத்தைக் கருத்திற் கொண்டும் சென்னை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் வயது வந்தவர் ஒருவருக்கு வழங்கப்படும் அரிசி அளவு பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை 2 கிலோ கிராம் ஆகவும், 12 வயதுக்குக் குறைந்த சிறுவர் ஒருவருக்கு பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை 1 கிலோ கிராம் ஆகவும் அதிகரிக்கப்படுகிறது. தற்போது வயது வந்தவருக்கு, சிறுவருக்கு பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை வழங்கப்படும் அரிசி அளவு முறையே 1.50 கிலோ கிராம், 0·75 கிலோ கிராம் ஆகும். அரசு சில்லறை விற்பனைக் கடைகளில் துவரம் பருப்பு வழங்கப்பட்டு வருகிறது. விற்பனை அளவைக் கொண்டு இச் சோதனை முறை மேலும் விரிவாக்கப்படும். இந்திய உணவுக் கழகத்திடமிருந்து கடலை, கடலைப் பருப்பு வந்து சேர்ந்ததும் அரசு சில்லறை விற்பனைக் கடைகள்—நியாயவிலைக்கடைகள்—மூலம் அவை வழங்கப்படும். இது குறித்து இந்திய உணவுக் கழகத்திற்கு எழுதப்பட்டுள்ளது. அரசுக் கடைகள், நியாயவிலைக் கடைகளில் உணவுப் பங்கீட்டு அட்டைகளைக் காட்டி வீட்டு உபயோகத்துக்காக கோதுமை பொருள் களை வாங்கிக் கொள்ளலாம். பெருமளவில் பொருள்கள் வாங்குவோர்கள் கடந்த கால நுகர்வு குறித்த புள்ளி விவரங்களைக் காட்டி உணவுப்பொருள் வழங்கு அதிகாரிகளுக்கு அனுமதி கோரி விண்ணப்பிக்கலாம்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உள்ளூர் நிலைமைகளைக் கருத்திற் கொண்டு அவர்கள் அவசியமெனக் கருதினால் சர்க்கரை விற்பனை செய்யும் நியாயவிலைக் கடைகள் மூலம் அரிசி இருப்பை தங்கள் உசிதம் போல் வழங்கலாம். பல்வேறு மாவட்டங்களில் அரசு கிடங்கு வசதிக் கழகத்தின் கிடங்குகளில் இருப்புகள் இருக்கின்றன.

அரசு இருப்புகளை, கன்னியாகுமரி மாவட்டத்தின் எல்லையோரப் பகுதிகளில் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. இதனுல் தனிப்பட்டவர்கள் அரிசி எடுத்துச் செல்வது முழு அளவில் தடுக்கப்படும். என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர் அவர்களே, குறுவையைப் பொறுத்த மட்டில் நான் ஏற்கெனவே சொன்னேன். குறுவை அறுவடைக்கு வருகிற நேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் எவ்வளவு கிடைக்கிறதோ அவ்வளவையும் உணவுக் கழகமும், தமிழ்நாடு வர்த்தகக் கழகமும் வாங்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அரசினர் தீர்மானம்.

விதி 41(3)ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்.—தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"பேரவையின் விதி 41(3)-ஐ தளர்த்தி, இரண்டுக்கு மேற்பட்ட தீர்மானங்களை இன்று எடுத்துக் கொள்ள வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.—பேரவையின் விதி 41-ன் கீழ், திரு. எ. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறுர்கள். அவர் இருக்கையில் இல்லை. ஆகவே, தீர்மானம் தள்ளுபடி செய்யப்படுகிறது.

5. கவன ஈர்ப்பு.

(அ) திருச்செந்தூர் பகுதியில் இருல் மீன் பிடிப்பதுபற்றி ஏற்பட்ட தகராறு குறித்து.

Thiru N. Dennis—Sir, I call the attention of the Hon. Minister for Harijan Welfare to a matter of urgent public importance, namely, the dispute over the prawn fishing at Tiruchendur area between various sections of people affecting harmony and export.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : திருச்செந்தூர் பகுதியில் மக்களில் பல பிரிவினருக்கிடையே ஒற்றுமையும் மீன் ஏற்றுமதியும் பாதிக்கப்படும் வகையில், இருல் மீன் பிடிப்பது பற்றித் தகராறு ஏற்பட்டது குறித்து மாண்புமிகு உறுப்பினர் தமது நாட்ட ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் வட்டத்தில், கட்டுமரங்களையும், நாட்டுப் படகுகளையும், பயன்படுத்தி மீன்பிடித்துவரும் ஓவரி, மணப்பாடு, வீரபாண்டியன்பட்டிணம், பெரியதாழை கிராமத்து மீனவர்கள் இந்தப் பகுதியில் விசைப் படகுகள் மூலம் மீன்பிடிப்பதற்கு